மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.5/2021
அசல் வழக்கு எண்.288/2013

1. கந்தசாமி
2. கொளந்த கவுண்டர்
3. குப்பன் சேவி
4. சின்னக்காள்
5. சிவகுமார்
6. மாரிமுத்து
7. அம்மணியம்மாள்
8. மாரக்காள்
9. ரவி
10. தாசன்
11. மாரியம்மாள்
12. மாரக்காள்
13. மாதையன்
14. அம்மாசி
15. ஈஸ்வரி
16. பெருமாள்
17. பெருமாயி
18. மாதையன்
19. வெங்கடாஜலம்
20. நாகம்மாள் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாதையன்
2. மாரியப்பன்
3. பாவாயி
4. பாப்பாத்தி
5. சின்னபொண்ணு
6. மாவட்ட ஆட்சியர், சேலம்.
7. வருவாய் கோட்டாட்சியர், மேட்டூர்.
8. வட்டாட்சியர், மேட்டூர். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 07.08.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் திரு.எஸ்.பீட்டர்

ராஜ், வழக்கறிஞர் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.எல்.கணபதி சுப்பிரமணியன், வழக்கறிஞர் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்குரைஞர் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாதநிலையில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருதரப்பு சாட்சியங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இவ்வழக்கினை அசல் வழக்கு எண்.183/2013 கூட்டாக விசாரிக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர், 10, 13, 14, 16, 18 மற்றும் 19வது மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.183/2013 தாக்கல் செய்துள்ளார். 10, 13, 14, 16, 18 மற்றும் 19வது மனுதாரர்கள் அவ்வழக்கில் ஆஜராகாததால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அதனை ரத்து செய்வதற்காக மனுதாரார்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது 15.06.2021–ல் எதிருரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இரண்டு வழக்கின் சொத்துகளும் ஒன்றாகும். எனவே அசல் வழக்கு எண்.183/2013 ஐ இவ்வழக்குடன் சேர்த்து விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:

மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கதக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.183/2013 2014–ம் வருடத்திலேயே தீர்ப்பானது. வழக்கு விசாரணைக்கு வரும்போது இதுபோல் மனுக்களை தாக்கல் செய்து வாய்தா பெறுவதை மனுதாரர்கள் வாடிக்கையாக கொண்டுள்ளனர். அ.வ.எண்.183/2013 நிலுவையில் இல்லாத நிலையில் இவ்வழக்குடன் சேர்த்து

விசாரிக்க முடியாது. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளனர்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே பிரச்சினையாகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் 10, 13, 14, 16, 18 மற்றும் 19வது மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.183/2013 தாக்கல் செய்துள்ளார் எனவும், 10, 13, 14, 16, 18 மற்றும் 19வது மனுதாரர்கள் அவ்வழக்கில் ஆஜராகாததால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது எனவும், அதனை ரத்து செய்வதற்காக மனுதாரார்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது 15.06.2021–ல் எதிருரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது எனவும், இரண்டு வழக்கின் சொத்துகளும் ஒன்று எனவும், எனவே அசல் வழக்கு எண்.183/2013 ஐ இவ்வழக்குடன் சேர்த்து விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.183/2013 2014–ம் வருடத்திலேயே தீர்ப்பானது எனவும், வழக்கு விசாரணைக்கு வரும்போது இதுபோல் மனுக்களை தாக்கல் செய்து வாய்தா பெறுவதை மனுதாரர்கள் வாடிக்கையாக கொண்டுள்ளனர் எனவும், அ.வ.எண்.183/2013 நிலுவையில் இல்லாத நிலையில் இவ்வழக்குடன் சேர்த்து விசாரிக்க முடியாது எனவும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இம்மனுவானது இவ்வழக்குடன் அ.வ.எண்.183/2013–யை சேர்த்து விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் இருதரப்பிலும் அ.வ.எண்.183/2013 ஏற்கனவே ஒருதலைபட்ச தீர்ப்பாகிவிட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே அ.வ.எண்.183/2013 தற்போது நிலுவையில் இல்லை என்பதும் தெரிய வருகிறது. ஆகவே நிலுவையில் இல்லாத வழக்குடன் இவ்வழக்கை சேர்த்து விசாரிக்க வேண்டும் என கூற முடியாது என்பதால் இம்மனு அனுமதிக்கதக்கதல்ல என இந்நீமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனு 1 முதல் 5 எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.